தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, மாசி 11, திருவள்ளுவர் ஆண்டு—2046

2015 பிப்ரவரி 23, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை."

இயற்கையான *அறிவுக் கூர்மையும், உயர்வான நூலறிவும் ஒருசேரப் பெற்றவர்களுக்கு நிற்று வைக்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சிகள் என்று எதுவும் இருக்க முடியாது.*

1. வினாக்கள்—விடைகள்

குறிக்கப்பட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

விழிப்புணர்வு

***23024—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2015 பிப்ரவரி 23

தமிழகத்தில் பொதுமக்களிடம் மின் சிக்கனம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

தமிழ்நாட்டில் பொதுமக்களிடம் மின் சிக்கனம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்பொருட்டு, அரசு பல்வேறு வகையான திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றில் பொதுவான திட்டங்களான, மின் சிக்கனக் குறிப்புகள் மற்றும் ஆலோசனைகளை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தனது வலைதளத்தில் வெளியிட்டுள்ளது. சுமார் 1.7 கோடி மின் நுகர்வோர்களுக்கு, மின் நுகர்வோர்களுக்கான கட்டணத்தை அறிவிக்கும் குறுஞ்செய்தியுடன் "மின்சாரத்தை சேமிப்போம்" என்ற மின் சேமிப்பு வாசகமும் சேர்த்து அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பயிற்சிப் பிரிவு வருடம் முழுவதும் பள்ளி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் நடத்தும் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகிய நிகழ்ச்சிகளில் மின் சேமிப்பின் முக்கியத்துவம், மின் திறன் மிக்க விளக்குகள் மற்றும் நட்சத்திரக் குறியீடு பெற்ற மின் சாதனங்களின் பயன்பாடு ஆகியவை பற்றியும் விளக்கப்படுகின்றது.

தேசிய மின் சிக்கன நாள் மற்றும் வாரம், ஆண்டுதோறும் டிசம்பர் 14 ஆம் தேதி முதல் டிசம்பர் 20 ஆம் தேதி வரை அனுசரிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் பொதுமக்களிடையே மின் சிக்கனத்தைப் பரப்பும் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாவின் ஒரு பகுதியாக ஊர்வலங்கள், மனிதச் சங்கிலிகள், மின் சேமிப்பு குறித்து நுகர்வோர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் அமர்வுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மின் சிக்கனம் குறித்த நாடகம், வீதிமுனை பிரச்சாரங்கள், தொழில்நுட்பப் பொருட்காட்சிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே மின் சிக்கனம் பற்றிய சொற்பொழிவு, கட்டுரை, ஓவியப் போட்டிகள் மற்றும் கலந்தாய்வுக் கூட்டங்கள்

2015 பிப்ரவரி 23]

நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், செய்தித்தாள்கள், தொலைபேசித் தகவல்கள், திரையரங்குகளில் காட்சி வில்லைகள் மற்றும் உள்ளூர் கேபிள் டி.வி. தொலைக்காட்சி மூலமும் மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மக்களிடையே விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்புத் திட்டங்களான சிறு குழல் விளக்குகள் வழங்கும் திட்டத்தின்கீழ் விலையில்லாமல் மின்சாரம் பெறும் அனைத்து குடிசை வீடுகளுக்கும் குமிழ் விளக்குகளுக்குப் பதிலாக விலையில்லா 9 வாட்ஸ் சிறு குழல் விளக்குகள் Compact Fluorescent Lamps (C.F.L.) 8.75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தில் ஆண்டுக்கு 60,000 வீடுகள் என்ற அளவில் 3 இலட்சம் மதிப்பில் கட்டப்படுகின்ற வீடுகளில் மின் சிக்கனத்திற்காக LED விளக்குகள் பொருத்தப்பட்டு, உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான தெரு விளக்குகளை சூரிய சக்திமூலம் ஒளிர்விக்கும் திட்டத்தின் மூலமாக ஆண்டிற்கு 20,000 தெரு விளக்குகள் வீதம், ஒரு இலட்சம் தெரு விளக்குகளை சூரிய சக்திமூலம் ஒளிர்விக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்திலும் மின் சிக்கனத்தை உறுதிப்படுத்துகின்ற வகையில் தெரு விளக்குகளில் C.F.L., LED பல்புகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 28,390 சூரிய சக்தியுடன் எரியும் தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

முற்பகல் 10-05

அதேபோல, எந்தெந்த இடங்களிலெல்லாம் மின் சேமிப்பை வலியுறுத்த முடியுமோ அல்லது எந்தெந்த இடங்களிலெல்லாம் மின் சேமிப்பை உறுதிப்படுத்த முடியுமோ, அந்த இடங்களையெல்லாம் கண்டறிந்து, தமிழ்நாடு மின்சார வாரியமும், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையும் (Tamil Nadu Energy Development Agency) இணைந்து மின் சிக்கனத்திற்காக பல்வேறு

தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை 24-2-2015 அன்று பிறந்தநாள் காணும் மக்களின் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

நான் கேட்ட வினாவிற்கு விலாவாரியாக புள்ளிவிவரத்தோடு சிறப்பாகப் பதிலளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருப்பினும், மக்கள் மத்தியில் மின்சாரத்தின் சிக்கனத்தைக் குறித்து கூடுதலாக விழிப்புணர்வு ஏற்படுத்த T.V.-யிலும், Cable T.V.-யிலும் விழிப்புணர்வு குறும்படங்களை அதிகளவில் ஒளிபரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மின்சார சிக்கனம், தேவை இக்கணம்' என்பதை வலியுறுத்தி, பல்வேறு விழிப்புணர்வு கருத்தரங்குகள், பேரணிகளை எல்லாம் நமது மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. எப்படி மக்களின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றியைப் பெற்றுத் தந்தார்களோ, அதைப்போல. இன்றைக்கு மின் சிக்கனத்தையும் மக்கள் இயக்கமாக மாற்றி, மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை, தொடர் நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு எடுத்து வருகிறது என்பதை ஏற்கெனவே சொல்லியிருந்தேன்.*

2015 பிப்ரவரி 23]

மற்றொன்று. இன்றைக்கு இந்தியாவிலேயே மிக அதிகமான அளவிற்கு தமிழ்நாட்டில்தான் தனி நபர் மின் நுகர்வு இருக்கிறது. தேசிய அளவிலே சராசரியாக ஒரு தனி நபர், ஆண்டு ஒன்றுக்கு 917 யூனிட்தான் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார். ஆனால், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே ஒரு தனி நபர், ஆண்டுக்கு 1,198 யூனிட் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார். அந்த அளவிற்கு தமிழகத்திலே மின் நுகர்வு மிக அதிகமான அளவிலே இருக்கிறது. ஆனாலும்கூட, தேவையான மின் நுகர்வைக் குறைத்துக்கொள்ளச் சொல்லவில்லை. தேவையைக் குறைத்துக்கொள்வதற்குப் பெயர் மின் சிக்கனம் அல்ல. தேவையில்லாமல் வீணடிக்கப்படுகின்ற மின்சாரத்தை சேமிப்பதுதான் மின் சிக்கனம் என்பதன் பொருள். ஆகவே, அதைத்தான் வலியுறுத்தி வருகிறோம். அதேமாதிரி, மின்சாரத்தை சேமிப்பது மட்டுமல்ல, வாழ்க்கையிலே சேமிப்பு என்பதே மிக முக்கியம். மின்சாரத்தை சேமிப்பதால் தனி நபருக்கும் பயன்படுகிறது, இந்த நாட்டுக்கும் பயன்படுகிறது. அதேபோல மின்சாரம் மட்டுமல்ல,

"அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்"

என்று வள்ளுவரே சொல்லி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் காலத்திலேயே, 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிக்கனத்தை வலியுறுத்தி இருக்கிறார். என்னதான் இருந்தாலும், சிக்கனமாக அளவறிந்து பயன்படுத்துவது, வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் என்பதை வலியுறுத்தும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாணவர்கள் மத்தியிலே, இளம் சமுதாயத்தினர் மத்தியிலே மின் சிக்கனத்தை நாம் வலியுறுத்தினால், அவர்கள் தங்களது பெற்றோர்கள் மற்றும் பிற வீடுகளில் இதைச் சொல்வார்கள் என்ற காரணத்தினால்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்துக் கல்விக்கூடங்களிலும் சிக்கனம் குறித்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்த அளவிலே எல்லா வகைகளிலும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மிக முக்கியமான ஊடகத் துறையிலே இருக்கின்றார். அதுமட்டுமல்ல, இன்றைக்கு திரைப்படத் துறையிலே புகழ்பெற்ற ஒரு நட்சத்திரமாக இருப்பதால், நீங்கள் மக்கள் மத்தியிலே இந்தச்

செய்தியை இன்னும் அதிகமாக எடுத்துச் சொல்ல முடியும். மின் சிக்கனத்தைப் பற்றி உங்களுடைய திரைப்படங்களிலேகூட ஏதாவது வாய்ப்பு கிடைத்தால் புகுத்திக்கொள்ளலாம். மக்கள் மத்தியிலே மின் சிக்கனத்தை வலியுறுத்துவதற்கான வாய்ப்பு அரசுக்கு மட்டுமல்ல, உங்களைப் போன்றவர்களுக்கும் இருக்கிறது என்பதால், நீங்கள் அத்தனை பேரும் மின் சிக்கனத்தை வலியுறுத்தி, நாட்டிற்கும், வீட்டிற்கும் உறுதுணை புரிய வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மின் சிக்கனம் என்பது வீணாவதைத் தடுப்பது என்று சொன்னேன். சில நேரங்களில், நாம் அவசரமான அலுவல் காரணமாக வீட்டிலிருந்து வெளியே வருகிறோம். அப்போது, வீட்டில் ஃபேன் ஓடிக்கொண்டிருக்கும், ஃப்ரிட்ஜ் ஓடிக்கொண்டிருக்கும், ஏ.சி. ஓடிக்கொண்டிருக்கும். அவற்றை நிறுத்தாமல் வெளியே வந்துவிடுவோம். அன்றைக்கு 3 மணிநேரம், 6 மணி நேரம், 8 மணி நேரம், அதாவது அடுத்த தடவை நீங்கள் வீட்டுக்குச் சென்று கதவைத் திறக்கின்ற வரைக்கும், அவை வீணாக ஓடிக்கொண்டிருக்கும். இப்படி விரயமாகிற மின்சாரத்தையாவது நீங்கள் தடுக்கலாம். அதன் மூலமாக நமக்கு மிகப் பெரிய அளவில் மின் சேமிப்பு கிடைக்கும். ஆகவேதான், இன்றைக்கு எல்லா வகைகளிலும், மின் சேமிப்பை வலியுறுத்துகின்ற வகையில், நல்ல கேள்வியைக் கேட்ட நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு எடுக்கின்ற மின் சிக்கன நடவடிக்கைகளுக்கும், மின் உற்பத்திக்கு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும் நீங்கள் அனைவரும் உங்களுடைய மேலான ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சிறப்பாகச் சொன்னார்கள். நாம் சிக்கனத்தை மின்சாரத்தில் மட்டுமல்ல, மற்ற துறைகளிலும்

கண்டுப்பிடிக்க வேண்டும், அது பணமாக இருந்தாலும், சேமிப்பு என்பது மிகவும் அவசியம் என்று சொல்லியிருந்தார்கள். உண்மையிலேயே சேமிப்பு மிக, மிக அவசியம். மக்களின் நல்லெண்ணத்தைச் சேமித்து வைத்திருந்ததால்தான், ஸ்ரீரங்கத்திலே மாபெரும் வெற்றியை மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பது தெள்ளத்தெளிவாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றுமொரு கருத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் சார்ந்த கலைத் துறையிலே, "நீங்கள் இதைப்பற்றி அதிகமாக எடுத்துரைக்கலாம்" என்று சொன்னார்கள். உங்களுக்கு ஓர் உத்தரவாதத்தை இன்று நான் தருகிறேன். சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவடைந்த உடனேயே, தயாரிப்பாளர் சங்கத்தில், பலதரப்பட்ட வகைகளில் நாம் எப்படி அரசுக்கு உதவியாக இருக்கலாம்; பலவேறு திட்டங்களை மக்களிடம் எப்படி எடுத்துச் செல்லலாம் என்ற அடிப்படையிலே பல திட்டங்களைத் தீட்டுவதாக இருக்கின்றோம். நிச்சயமாக ஒவ்வொரு திரைப்படமும் இனி வெளிவரும்போது மின்சார சிக்கனம் குறித்த சிறு செய்தியை நாங்களாகத் தயாரித்து, அந்தப் படத்தை அதனுடன் இணைத்துக்கொள்கிறோம் என்பதை உங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில், தென்காசி நகராட்சி பொன்விழா கொண்டாடவுள்ள இந்த வேளையில், தென்காசிக்கு 4 துணை மின் நிலையங்கள்மூலம் மின் விநியோகம் பெறப்பட்டு, தாமிரபரணி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தாமிரபரணி குடிநீர்த் திட்டம் தாமிரபரணியில் துவங்கி தென்காசி வரை உள்ள 4 துணை மின் நிலையங்களையே நம்பியுள்ளது. இச்சூழ்நிலையில், 4 துணை மின் நிலையங்களில் ஏதேனும் ஒரு துணை மின் நிலையத்தில் மின் தடை ஏற்பட்டாலும்கூட, குடிநீர் கொண்டுவருவதில் தடங்கல் ஏற்பட்டு, தென்காசிக்குத் தேவையான குடிநீர் குறிப்பிட்ட காலத்திற்குள் வந்து சேருவதில்லை. இதனால், குடிநீர்த் தேவையும் நிறைவுபெற இயலவில்லை. எனவே, தென்காசி நகராட்சிக்கு குடிநீர் வழங்க தாமிரபரணியிலிருந்து தென்காசி வரை ஒரே மின் வழிப்பாதை அமைத்து மின் விநியோகம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஓர் உத்தரவினை வழங்கியிருக்கிறார்கள். குடிதண்ணீர்ப் பிரச்சினையை சமாளிப்பதற்காக, மின் இணைப்பு தருவதிலே சிறப்பு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் அளித்த உத்தரவின் அடிப்படையிலே, இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்குவதிலும், அதிலே* dedicated feeder-*க்கென தனியாக மின் இணைப்பு கொடுப்பதற்கும் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் கருத்தை எழுத்து மூலமாகக் கொடுத்தீர்களென்று சொன்னால், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறும் இந்த அரசு, நிச்சயமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

புறவழிச் சாலை

***38075—திரு. என்.எஸ்.என். நடராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் மற்றும் வெள்ளக்கோவில் பகுதிகளில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS